

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

# நீர் மறுசுழற்சி முறையில் சிறிய அளவிலான தொட்டிகள் அமைத்து நன்னீர் மீன்வளர்ப்பு


வணக்கம், ராமு எப்படி இருக்கிங்க?
வணக்கம், அஜித். நல்லா இருக்கேன்.
ராமு நான் ரூ. 7.50 இலட்சம் அளவில் முதலீடு செய்து தொழில் செய்யலாம்னு இருக்கேன். எதாவது பிசினஸ் ஐடியா இருந்தா சொல்லு?
நீ ஏன் அஜித் மீன் வளர்க்க கூடாது?


மீன் வளர்க்க அதிக தண்ணீர் வேண்டுமே, நம்ப ஊர்ல தான் குடிக்கக்கூட தண்ணியில்லியே?
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மூலம் "நீர் மறுசுழற்சி முறையில் சிறிய அளவிலான தொட்டிகள் அமைத்து நன்னீர் மீன்வளர்ப்பு" திட்டம் செயல்படுத்தபடுகிறது. இந்த முறையில் மீன் வளர்த்தால் நீர் அதிகமாக தேவைப்படாது.
அப்படியா ராமு! இத அமைக்க எவளோ செலவு ஆகும்? நமக்கு எவளோ மானியம் வரும்?
இத்திட்டத்தின் கீழ் ஓர் அலகிற்கான மொத்த செலவுத் தொகை ரூ. 7.50 இலட்சம் ஆகும். அதில், பொதுப் பிரிவினருக்கு 40% மானியத் தொகையாக ரூ. 3 இலச்சமும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் பெண்கள் பிரிவினருக்கு 60% மானியத் தொகையாக ரூ. 4.50 இலச்சமும் மீன்வளத்துறையால் வழங்கப்படுகிறது

உனக்கு தெரிஞ்ச
யாராவது இத்திட்டத்தின்
கீழ் மீன் வளர்த்து
வராங்களா?



என்னோட அக்கா, அருன்ஹெமலா,
திருவாரூர் மாவட்டத்துல இருக்காங்க,

தற்போது, மீன்துறை அதிகாரிகளின்
வழிகாட்டுதல்களைப் பின்பற்றி,
இத்திட்டத்தின் கீழ் 1,600 கிலோ GIFT
திலேப்பியா  அறுவடை செய்து, ரூ
2,08,000/-  வரை வருமானம்
பெற்றதாக சொன்னார்.



சரி ராமு,
இந்த திட்டத்தில் எப்படி பயனடைவது?



உங்களுடைய மாவட்ட மீன்வளம் மற்றும்
மீனவர் நலத்துறை உதவி இயக்குநர்
அலுவலகத்துக்கு சென்று விண்ணப்பத்த
பூர்த்தி செஞ்சுட்டு வாங்க.. பிறகு மீன்வள
அலுவலர்கள் மீன்வளர்ப்பு பயிற்சி அளித்து
தொட்டிகள் அமைக்கவும் உதவுவார்கள்.





ஐடியா நல்லா இருக்கு ராமு,
நன்றி ராமு. நாளைக்கே அந்த
ஆபீஸ்கு போறன்.



சரி அஜித்.
பார்ப்போம்



**மானியம் பெற தகுதியுடையவர்கள்**

பயனாளி மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையில் உறுப்பினராக சேர்ந்திருப்பது அவசியம்

**சமர்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்**

- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம்
- திட்ட அறிக்கை (DPR)
- தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தின் நில ஆவணங்கள்
- ஆதார் அட்டை நகல்
- வங்கி கணக்கு புத்தக நகல்